செய்தி வெளியீடு - 346.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை –11.6.2011

பெரியார் அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு தேனி மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 14.6.2011 முதல் பெரியார் அணையிலிருந்து **120 நாட்களுக்கு** முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் தேனி மாவட்டத்தில் **14,707 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

**வைகை** அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 14.6.2011 முதல் வைகை அணையிலிருந்து **120 நாட்களுக்கு** முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் **45,041 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

**பாபநாசம், சேர்வலார் மற்றும் மணிமுத்தாறு** நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 14.6.2011 முதல் பாபநாசம், சேர்வலார் மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து **120 நாட்களுக்கு** கார் பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் திருநெல்வேலி மாவட்டத்தில் **18,090 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9.